தமிழ் முரசு

TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY

சமூகம்
இசைப்புயலுடன் உள்ளூர் பிரபலம் 4

திருப்பதி லட்டு
ஏ.ஆர்.டெய்ரி நிறுவனத்தில் சோதனை 6

மேற்கு வங்கம்
வேலைக்குத் திரும்பிய சில மருத்துவர்கள் 7

திரைச்செய்தி
சுப்புலட்சுமியாக வித்யா பாலன் 12

22 செப்டம்பர் 2024 • ஞாயிறு

தோற்றம்: 1935 நிறுவனர்: தமிழவேள் கோ.சாரங்கபாணி MCI (P) 002/04/2024

sph media

நல்லாசிரியர் விருது நிகழ்ச்சியில் உள்துறை, சட்ட அமைச்சர் கா. சண்முகம் புகழாரம்

தமிழாசிரியர் பணி தலைசிறந்த சேவை

தமிழ் முரசு, சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழு இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் ஒன்பது தமிழ் ஆசிரியர்களுக்கு விருது வழங்கப்பட்டது. **படம்: பே. கார்த்திகேயன்**

அனுஷா செல்வமணி

இலைகளாலும், கிளைகளாலும், உறுதியான விழுதுகளாலும் நிழல் தந்து ஓர் ஆலமரம் ஆதரவு வழங்குவதுபோல், மாணவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து கல்வியில் சிறந்து விளங்க ஆதரவும், அரவணைப்பும் நல்கி வழிகாட்டுபவர்கள் ஆசிரியர்கள் என்று அவர்களது அரும்பணியை உள்துறை, சட்ட அமைச்சர் கா. சண்முகம் பாராட்டியுள்ளார்.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் சனிக்கிழமை (செப்டம்பர் 21) நடைபெற்ற நல்லாசிரியர் விருது நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு அமைச்சர் சண்முகம் உரையாற்றினார்.

தமிழ் முரசு நாளிதழ், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், தமிழ் மொழி கற்றல் வளர்ச்சிக் குழு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்ச்சியில் ஒன்பது தமிழ் ஆசிரியர்கள் விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர்.

திருவாட்டி வீரராஜு தேவிகா (சி.எச்.ஐ.ஜெ. தோ பாயோ தொடக்கப் பள்ளி) திருவாட்டி ஜெயசுதா விஜய குமாரன் (செங்காங் தொடக்கப் பள்ளி), திருவாட்டி சாரதா ராமன் (உட்குரோவ் தொடக்கப் பள்ளி), திருவாட்டி ஜைனுல் பானு ஷாகுல் ஹமீட் (டெயி உயர் நிலைப் பள்ளி), திருவாட்டி மலர் விழி பெருமாள் (ஈசூன் உயர் நிலைப் பள்ளி), திரு சேதுராமன் ரமேஷ் ராஜா (பூன் லே உயர்நிலைப் பள்ளி) ஆகியோர்க்கு நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டது.

செல்வி பாவனா இராஜாராம் (குவீன்ஸ்டவுன் உயர்நிலைப் பள்ளி), திருவாட்டி ஜெம்பு கிருஷ்ணமூர்த்தி நளினி (ஏங் கர் கிரீன் தொடக்கப்பள்ளி) இருவரும் தேசிய கல்விக் கழகத்தின் சிறந்த பயிற்சியாசிரியர் விருது பெற்றனர்.

முனைவர் எஸ். பி. ஜெயராஜ தாஸ் பாண்டியன் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றுக்கொண்டார்.

கடந்த 23 ஆண்டுகளாக வழங்கப்பட்டுவரும் இந்த விருது 200க்கும் மேலான தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, தொடக்கக் கல்லூரி மற்றும் புகுமுகக் கல்வி நிலைய ஆசிரியர்களை அங்கீகரித்துள்ளது.

சவால்மிக்க உலகச் சூழலில் நுட்பமாக சிந்திப்பவர்களாகவும், கருத்துப் பரிமாற்றம் செய்பவர்களாகவும், தங்களைத் தயார் நிலையில் வைத்துக்கொள்பவர்களாகவும் மாணவர்கள் விளங்க வேண்டிய அவசியத்தை அமைச்சர் சண்முகம் வலியுறுத்தினார்.

அண்மையில் டெக் கீ சமூக மேம்பாட்டுக் கழகத்தின் கல்வி விருது வழங்கும் விழாவில் உடல் அளவிலும், உள்ளத்தளவிலும் துணிவுடன் சவால்களை எதிர்கொள்வதன் அவசியத்தை மாணவர்களிடம் மூத்த அமைச்சர் லீ சியன் லூங் எடுத்துரைத்ததை சுட்டினார் திரு சண்முகம்.

நல்ல பண்புகளை மாணவர்களுக்குப் புகட்டுவது ஆசிரியர் தான் என்ற அமைச்சர், "நல்லாசிரியர்களே மாணவர்களுக்கும், இளையர்களுக்கும் முன்னோடியாவர், முன்மாதிரியாவர். மனிதப் பண்புகள், அறங்கள், வாழ்க்கைக்குத் தேவையான திறன்கள் ஆகியவற்றை தமிழ் மொழியோடு கற்பிப்பது முக்கியமாகும். தமிழ்மொழியைக் கற்பிப்பதோடு நின்றுவிடாமல், விழுமியங்கள், மரபு, பண்பாட்டுக் கூறுகளையும் கற்பிப்பது தமிழாசிரியர்களின் கடமையும் தனித்தன்மையும் ஆகும்," என்று தெரிவித்தார்.

மாறி வரும் உலகத்தில் அம் மாற்றங்களை சமாளிக்கும் வகையில் மாணவர்களை உருவாக்க ஆசிரியர்கள் தங்களை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

நன்னெறிகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் கதைகள் வழியாகவும், தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஆர்வத்தை ஊட்டும் வகையிலும் கற்பிக்கும் திருவாட்டி ஜெயசுதாவையும், இக்கால இளையர்களின் விருப்பங்களை மனதிற் கொண்டு தம் வகுப்பில் தமிழ் சார்ந்த தகவல்களைத் திரட்ட பொருத்தமான சமூக ஊடகங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் திருவாட்டி ஜைனுல் பானுவையும் முன்மாதிரிகளாக அமைச்சர் சுட்டினார்.

கண்ணதாசன் பாடல்களால் ஈர்க்கப்பட்டு இசையை தம் பாடங்களில் இணைத்துக் கொண்டு பாடல்கள் வழி மாணவர்களது மனத்தில் மொழியின் உணர்வை ஆழமாகப் பதியச் செய்த வாழ்நாள் சாதனையாளர் முனைவர் எஸ். பி. ஜெயராஜதாஸ் பாண்டியனையும் அவர் பாராட்டினார்.

தமிழ் முரசு நாளிதழ் நமது சமூகத்தின் குரலாக திகழ்கிறது என்று கூறிய அமைச்சர், எதிர்வரும் தமிழ் முரசின் 90வது பிறந்தநாளை அனைவரும் சேர்ந்து கொண்டாடுவோம் என்றும் சொன்னார்.

sanush@sph.com.sg

மேலும் செய்தி - பக்கம் 5

ஹிஸ்புல்லா ராணுவத் தளபதி பலி

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேல் வெள்ளிக்கிழமை நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட 31 போராளிகளில் இரண்டாவது மூத்த ராணுவத் தளபதியும் ஒருவர் என ஹிஸ்புல்லா அமைப்பு சனிக்கிழமை (செப்டம்பர் 21) தெரிவித்தது.

ஹிஸ்புல்லாவின் ராணுவத் தலைமைத்துவத்துக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவை இந்த உயிர்ச்சேதம் கோடிட்டுக் காட்டுகிறது.

பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் முன்னணி ரத்வான் படைத் தலைவர் இப்ராகிம் அகிலும் இதர மூத்த ராணுவத் தலைவர்களும் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.

ராணுவத் தலைவர்கள் உடனான சந்திப்பு ஒன்றில் அகில் இருந்தபோது அவர் கொல்லப்பட்டதாக ஹிஸ்புல்லாவுக்கு நெருக்கமான ஒரு தரப்பு தெரிவித்தது.

லெபனானில் ஹிஸ்புல்லாவின் கோட்டையாக உள்ள பல பகுதிகளில் இந்த வாரம் அகவிகள் (பேஜர்) மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதில் 37 பேர் கொல்லப்பட்டனர். அதையடுத்து நடந்துள்ள இந்த வான்வழித் தாக்குதல், ஹிஸ்புல்லாவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து புதிய கேள்விகளை எழுப்பியுள்ளதோடு, அதன் போராளிகளின் மனவுறுதிக்குக் கடும் அடியைத் தந்துள்ளது.

இரண்டாவது மூத்த ராணுவத் தளபதியை அகமது மஹ்முட் வஹ்பி என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 2023 அக்டோபரில் காஸா போர் தொடங்கிய திலிருந்து 2024 தொடக்கம் வரை இஸ்ரேலுக்கு எதிரான ஹிஸ்புல்லாவின் போர் நடவடிக்கைகளுக்கு அவர் தலைமை தாங்கியதாக அந்த அமைப்பு கூறியது.

அகிலின் மரணத்தை உறுதிப்படுத்திய ஹிஸ்புல்லா, அவரை "மாபெரும் தலைவர்களில் ஒருவர்" எனப் போற்றியது. 1983ல் பெய்ரூட்டில் இருந்த அமெரிக்கத் தூதரகம் மீது நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்டதற்காக அமெரிக்காவால் தேடப்பட்டு வந்தவர் அகில்.

இந்நிலையில் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல், தரையில் ஒரு பெரிய பள்ளத்தை ஏற்படுத்தி ஓர் உயரமான கட்டடத்தின் கீழ்த்தளங்களை குடைந்தெடுத்ததாக ஏஎஃப்பி செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

காஸா போர் தொடங்கிய திலிருந்து ஹிஸ்புல்லா ராணுவத் தலைமை மீதான இஸ்ரேலின் இரண்டாவது தாக்குதல் இது.

பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதிகளைக் குறிவைத்து இஸ்ரேலியத் தாக்குதல் நடந்த இடம். **படம்: ஏஎஃப்பி**

8 887181 530012 >

70 காசு

தமிழ் முரசு சந்தாவுக்கு அழைக்கவும்: 6388-3838

இலங்கை அதிபர் தேர்தல்: நிறைவடைந்தது வாக்களிப்பு

கொழும்பில் வாக்காளர் ஒருவர். **படம்: ஏஎஃப்பி**

இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத பொருளியல் நெருக்கடியைத் தொடர்ந்து, அதன் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் அதிபர் தேர்தலில் வாக்குப்பதிவு சனிக்கிழமை (செப்டம்பர் 21) நடைபெற்றது.

தற்போதைய அதிபர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இடதுசாரி கூட்டணித் தலைவர் அனுர குமார திசாநாயக்க ஆகியோர் இடையே கடும் போட்டி நிலவியது. அண்மைய கருத்துக்கணிப்பு ஒன்றில் அனுர குமார முன்னணி வகித்ததை ராய்ட்டர்ஸ் சுட்டியது.

சிக்கன நடவடிக்கைகளைச் செயல்படுத்திய பின்னர், பதவியை தக்கவைத்துக்கொள்வதில் அதிபர் ரணில் கடும் சவாலை எதிர்கொண்டுள்ளார்.

உள்ளூர் நேரப்படி காலை 7 மணிக்குத் தொடங்கிய வாக்களிப்பு மாலை 4 மணியுடன் நிறைவடைந்தது. நாடு முழுவதும் வாக்களிப்பு அமைதியான முறையில் நடந்தேறியது.

"இலங்கையின் தேர்தல் வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தல் என 2024 அதிபர் தேர்தல் பதிவு செய்யப்படும்," என்று தேர்தல் ஆணையாளர் ஆர்எம்ஏஎல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

தேர்தல் முடிவுகள் சனிக்கிழமை நள்ளிரவில் வெளிவரத் தொடங்கும் என்றும் ஞாயிற்றுக்கிழமை (செப்டம்பர் 22) வெற்றியாளர் அறிவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் 22 மில்லியன் மக்களில் 17 மில்லியனுக்கும் அதிகமானோர் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றனர். 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற நிலையில், நாடளவில் 13,421 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற்றது.

பிற்பகல் 4 மணி நிலவரப்படி கிட்டத்தட்ட 70 விழுக்காட்டினர் வாக்குகளைப் பதிவு செய்தனர்.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஜோன் பிலிப் லூயிஸ் என்பவர் தம் 106வது வயதில் தனது வாக்கைப் பதிவு செய்தார்.

வாக்களிப்பு தினத்தில் வன்முறைச் சம்பவங்களையும் சட்ட மீறல்களையும் கட்டுப்படுத்த காவல்துறையினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதுடன், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கண்காணிப்பில் ஈடுபட்டன.